DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.85/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | சுகன்யா (P.w.7 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of November 2025
( எதிரிகள் ஆஜர் . )

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கண்டுகொண்டான்மாணிக்கத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை 1 /12 வருடங்களுக்கு முன்பு சண்டை தினத்திற்கு மறுநாள் மாலை எனது வீட்டிற்கு முன்பு சண்டை நடந்த இடத்திற்கு அருகில் வைத்து போலிசார் என்னிடம் வந்து எங்கு வைத்து சண்டை நடந்தது என்று என்னிடம் விசாரித்து என் முன்னிலையில் வரைபடம் வரைந்து அருகில் உள்ள வீட்டினைப்பற்றி கேட்டு விசாரணை செய்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், நானும் கையொப்பம் போட்டேன். நான் கையொப்பம் செய்யும்போது என்னுடன் ராதிகா

நின்றார் அவரும் கையொப்பம் செய்தார். (**அந்த அந்த பார்வை மகஜர் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

அசா1 செல்வம் எனது பெரியப்பா ஆவார். அசா2 இஸ்ரவேல் எனது மாமனார் ஆவார். அசா3 ஆரோக்கியம் எனது உறவினர் இல்லை. அசா4 மோட்சம் எனது மாமா உறவு. அசா5 மிஸ்டர் வேளாங்கண்ணி எனது உறவினர் கிடையாது. அசா6 ரமேஷ் ராஜா எனது கணவர். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கையொப்பம் செய்த பேப்பரில் என்னஎழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் சொன்னதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிர்வழக்கு போட்ட விபரம் எனக்கு தெரியாது. குற்ற எண்.150/2019 நரிக்குடி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மாதம் மாதம் என் கணவர் நீதிமன்றத்திற்கு வாய்தாவிற்கு வருவது தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் இருந்து எனது கணவரையும் , உறவினரையும் காப்பாற்றுவதற்காக நானே தானாக முன்வந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.